# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CRLMP. No.242/2021 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | **ம.சா.1** |
| Name | : | **சுதாகர்** |
| Father's/Husband Name: | | **பழனிமுத்து** |
| Village | : | **கை.களத்தூர்** |
| Taluk | : | **பெரம்பலூர்** |
| Age | : | 42 /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.01.2021

**பிரமாண வாக்குமூலம்**

நான் மழை நிதி லிமிடெட் என்ற நிறுவனத்தை அரசு அங்கீகாரம் பெற்று நடத்தி வருகிறேன். அதில் கண்ணகி என்பவர் PL0101000493 என்ற எண்ணில் தனிநபர் கடனாக ரூ.50,000 பெற்றார். மாதம் ஒன்றுக்கு ரூ.2,744 வீதம் 24 மாதங்களில் செலுத்தி விடுகிறேன் என்று 10.02.2018 அன்று பெற்றார். அவர் மூன்று தவணைகளை மட்டுமே செலுத்தினார். பாக்கியுள்ள 21 தவணைகளை செலுத்தும்படி 14.10.2020 அன்று அவரிடம் கேட்டேன். அவர் 21 தவணைகளுக்கான அசல் மற்றும் வட்டியும் சேர்த்து ரூ.85,608 கான கரூர் வைசியா பேங்க் காசோலை எண்.000118 என்ற எண்ணுள்ள காசோலையை கொடுத்தார். நான் 15.10.2020 அன்று மழை நிதி நிறுவனத்தின் வங்கி கணக்கில் South Indian bank கணக்கு எண்.0800073000000051 என்ற எண்ணில் வசூலுக்கு போட்டேன். எனக்கு 19.10.2020 அன்று பணம் இல்லை என்று எஸ்.எம்.எஸ் வந்தது. நான் 28.10.2020 அன்று காசோலையை திரும்ப பெற்றேன். கண்ணகி என்பவருக்கு 17.11.2020 அன்று நிறுவனத்தின் வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பினேன். நோட்டீஸை பெற மறுத்துவிட்டார் என்ற திரும்ப வந்தது. கண்ணகி என்பவர் மீது நடவடிக்கை எடுத்து பணத்தை பெற்று தரும்படி மனுப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.